**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 824/2023**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | தாலுகா | : | ஆலங்குளம் |
| தந்தை பெயர் | : | கணேசன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | கீழப்பாவூர் | வயது | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 25th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு கீழப்பாவூர் சாஸ்தா கோவில் பக்கம் போலீசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். அந்த வழியாக நான் காலை 07.30 மணிக்கு குளிக்க போகும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி  கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 19.09.2022ம் தேதி, அதிகாலை 03.00 மணிக்கு சாமி வீட்டின் பக்கம் வைத்து போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. பின்னர், அன்றைய தினம் 04.00 மணிக்கு சம்பவயிடத்தில் வைத்து இரும்பு கத்திரிப்பான் ஒன்றை போலீசார் அத்தாட்சி கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் நானும், பழனி என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.26 13:49:01 +0530